12th November 1965]

Building for Primary Health Centre, Chinnalappatty

* 520 *Q.*—Sri V. S. S. MANI : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether any site has been donated by the Public for the construction of a building for establishing a Primary Health Centre at Chinnalappatty in Authoor Panchayat Union, Dindigul taluk;

(*b*) if so, when; and

(*c*) whether the work has been taken up for execution?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) ஆம்.

(இ) நன்கொடையாக அளிக்கப்பட்ட நிலத்தை 1963-ல் அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. ஆனால் நன்கொடைப்பத்திரம் 1965, மார்ச் 23-ம் தேதியன்றுதான் பதிவு செய்யப்பட்டது.

(உ) இப்பணியை நிறைவேற்றுவதற்கு இன்னும் எடுத்துக் கொள்ளவில்லை. சின்னாளப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கான மருந்தகக் கட்டிடங்களும் பணியாளர் குடியிருப்புகளும் கட்டுவதற்காக ரூ. 2 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் வரைபடங்களையும் மதிப்பீடுகளையும் சென்னையிலுள்ள (கட்டிடத்) தலைமைப் பொறியாளர் தயாரித்து அனுப்பியுள்ளார். இவ் வரை படங்களும் மதிப்பீடுகளும் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளது.

ரூரல் டிஸ்பென்ஸரி டாக்டர்கள்

* **521 கேள்வி.—திரு.** சோ. ஆறுமுகம் : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றிப்பு மன்றங்களின் கீழ் நடைபெற்று வரும் ரூரல் டிஸ்பென்ஸரிகளில் பணிபுரியும் டாக்டர்களை அந்தந்த வட்டாரத்திற்குள் மாற்றுவது சம்பந்தமாகவுள்ள விதிமுறைகளில் மாற்றம் செய்யும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்திற்கு உண்டா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) உத்தேசமில்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

கழிவு நீர்க்கால் அமைக்கும் திட்டம்

* **522 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கடலூரில் (Drainage Scheme) அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலிருக்கின்றதா?

(இ) ஆம் எனில், அதற்கான உத்தேச மதிப்பீடு எவ்வளவு?

(உ) அதன் வேலை எப்போது மேற்கொள்ளப்படும்?